**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**15.09.2025.**

OS. No. 205/2018

பக்கம் 3

PW1 – செல்வராஜ்

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் பிரதிவாதியின் இறப்பிற்கு பிறகு அவருடைய கணவரான சுப்பிரமணியை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அவரை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றும் அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. நானும், இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகளும், முதல் பிரதிவாதி மற்றும் சுப்பிரமணி ஆகியோரின் மகன்கள் மற்றும் மகள் என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் நீள, அகலம் என்னவென்றால் 22 அடி அகலம், 110 அடி நீளம் கொண்டதாகும். என் மீது ஒரு கற்பழிப்பு வழக்கு இருந்த காரணத்தினால் எனக்கு யாரும் திருமணம் செய்து கொடுக்க முன்வரவில்லை என்றால் சரிதான். அதன் காரணமாக கிறிஸ்தவ மதத்தை சார்ந்த என்னுடைய மாமன் மகனை இரண்டாம் பிரதிவாதி ஏற்பாட்டின்பேரில் திருமணம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நானும், என்னுடைய மாமன் மகளும் இருவரும் சேர்ந்து தான் திருமணம் செய்து கொண்டோம். நானும், என்னுடைய மாமன் மகளும் தன்னிச்சையாக தான் திருமணம் செய்து கொண்டோம் எங்கள் வீட்டார் என்னுடைய மனைவி வீட்டார் எவ்விதத்திலும் எங்களுக்கு உறுதுணையாக நிற்கவில்லை. நாங்கள் இருவரும் தாமாக திருமணம் செய்து கொண்ட காரணத்தினால் இரண்டாம் பிரதிவாதியான என்னுடைய தம்பிக்கு இதுநாள் வரையிலும் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கில் இருந்து என்னை காப்பாற்ற அதனை நடத்தவும் என்னுடைய திருமணத்தை நடத்தி வைக்கவும் இரண்டாம் பிரதிவாதியான என்னுடைய சகோதரர் தான் ரூபாய் 2 லட்சம் கடனாக பெற்றிருந்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த விபரத்தை என்னுடைய தாயாரான முதல் பிரதிவாதி அவருடைய

எதிர்உரையில் சொல்லி உள்ளார் என்றும் அதனை நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. என்னென்ன காரணங்களுக்காக வேண்டி இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்உரையில் சொல்லப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். தாவா சொத்து முதல் பிரதிவாதிக்கு தான் சொந்தமானது என்றால் சரிதான் அதன் அடிப்படையில் தான் அவருக்கு பட்டா வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அது தமிழக அரசால் வழங்கப்பட்ட இலவச பட்டா மனையை சார்ந்தது என்றால் சரிதான். இதுநாள் வரை அது காலி மனையாக தான் உள்ளது. 26.12.2017 தேதியிட்ட முதல் பிரதிவாதியான என்னுடைய தாயாரை அழைத்துச் சென்று காஞ்சிபுரம் சார்பாக அலுவலகத்தில் வைத்து தாவா சொத்தை எனது பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொண்டேன். எவ்வளவு பணம் செட்டில்மெண்ட் ஆவணத்திற்காக நான் செலுத்தினேன் என்றால் அது குறித்து எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அதற்குரிய செலவினை நான் தான் செய்தேன். என்னுடைய தந்தை மற்றும் சகோதர, சகோதரிகளான இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகளுடன் எனக்கு எவ்வித பேச்சு வார்த்தையும் கிடையாது என்ற காரணத்தினால் அந்த ஆவணத்தை ஏற்படுத்தும் பொழுது நான் அவர்களை என்னுடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லவில்லை. தொகுப்பு வீடு கட்டுவதற்காக வேண்டி நான் கடன்தொகை பெற வில்லங்க சான்றிதழை பெற்றபோதுதான் என்னுடைய தாயார் எனக்கு ஏற்படுத்திக்கொடுத்திருந்த செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டிருந்த விபரம் எனக்கு தெரியவந்தது. என்னுடைய தாயாரிடம் எதற்காக செட்டில்மெண்ட் பாத்திரத்தை ரத்து செய்யப்பட்ட விபரம் குறித்த கேட்டபோது என்னுடைய தாயார் அவர் ரத்து செய்யவில்லை என்றும் என்னிடம் தெரிவித்தார். இது தொடர்பாக நானும், என்னுடைய தாயார் சேர்ந்து செவிலிமேட்டில் உள்ள அரசு அலுவலகத்தில் ஒரு மனு அளித்திருந்தோம். என்னுடைய தாயார் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து

செய்யாமல் இருந்தபோது ஏன் அவரை இவ்வழக்கில் முதல் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் என்னுடைய வழக்கறிஞர் சொன்னதன் அடிப்படையில் அவரையும் ஒரு தரப்பினராக சேர்ந்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய சகோதர, சகோதரிகள் என்னுடைய தாயாரை அழைத்துச்சென்று எனது பெயரில் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டு தாவா சொத்தை எனக்கும் மற்றும் இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகளுக்கும் சேர்த்து வாசா.ஆ.3 செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் மறுபடியும் ஒரு செட்டில்மெண்ட் பாத்திரம் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார் இது தொடர்பாக நான் என்னுடைய தாயாரை கேட்டபோது அது குறித்து அவருக்கு தெரியாது என்றும் இரண்டாம் பிரதிவாதிக்கு ஒரு சொத்து வழங்கப்பட்டு விட்டதாகவும் தாவாசொத்தை எனக்கு வழங்கி விட்டதாகவும் தான் தெரிவித்தார் அவரை ஏமாற்றி தான் இரண்டு மற்றும் மூன்றும் பிரதிவாதிகள் வாசாஆ 3 ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளனர். என்னுடைய தாயாருக்கு எழுதப்படிக்க தெரியாது என்ற காரணத்தினால் தான் தொகுப்பு வீடு கட்டுவதற்காக வேண்டி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு என்னுடைய தாயார் அழைத்துச் சென்று அதன் மூலம் வாசாஆ 1 ஆவணத்தை நான் எனது பெயருக்கு ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் தவறாகும். அந்த ஆவணம் என்னுடைய தாயாரின் வயோதிகம் மற்றும் அறியாமை காரணமாக என்னால் உள்நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டது என்ற காரணத்தினால் அந்த ஆவணம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. வாசாஆ 3 ஆவணத்தை பத்திர எழுத்தர் சொல்லி தயார் செய்து அதில் தான் என்னுடைய தாயாரின் கைரேகையை பெற்றேன். வாசாஆ.3 ஆவணத்தை நான் இவ்வழக்கிற்காக வேண்டி தயார் செய்து ஜோடித்த தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதில் உள்ள கைரேகை முதல் பிரதிவாதியின் உடையது அல்ல என்றால் தவறாகும். வாசாஆ 1 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட மூன்று மாதங்களுக்குள் வாசாஆ 5 அறிவிப்பினை நான் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 10 ஆவணம் நான் கொடுத்த மனுவிற்காக எனது பெயருக்கு

வழங்கப்பட்ட பதில் தான் வேண்டும் அதனால் நான் கொடுத்த மனுவின் நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்யாததற்கு ஏதாவது காரணம் உள்ளதா என்றால் கிடையாது அன்றைய தினம் நானும், என்னுடைய தாயார் தலா ஒரு மனு கொடுத்தோம் அதன் அடிப்படையில் தான் வாசாஆ 10 பதிலினை எனது பெயருக்கு கொடுத்துள்ளனர். அந்த ஆவணத்தின்படி நீதிமன்றத்தில் சென்று பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தேன் என்றால் சரிதான். ரத்து செய்யப்பட்ட ஆவணத்திற்கு பிறகு என்னுடைய தாயார் எனக்கு எந்த ஒரு ஆவணமும் தாவா சொத்து தொடர்பாக ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தற்போது நான் என்னுடைய மாமன் மகளோடு வாழவில்லை என்றும் வேறொரு பெண் உடன் வாழ்ந்து அவர் மூலம் எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்துள்ளனர் என்றால் தவறாகும் தற்பொழுதும் நான் என்னுடைய மாமன் மகளுடன் தான் வாழ்ந்து வருகின்றேன். அவர் பெயர் கௌதமி ஆகும் அவர் மூலமாகத்தான் எனக்கு இரண்டு குழந்தைகள் பிறந்துள்ளனர். நான் என்னுடைய பெற்றோரை அடிப்பது வாடிக்கையாக கொண்டு உள்ளேன் என்றால் தவறாகும். என்னுடைய தாயாரை அடித்து துன்புறுத்து தான் தாவா சொத்தை அவரிடம் இருந்து வாசாஆ 1 ஆவணம் மூலம் செட்டில்மெண்ட் பெற்றுள்ளேன் என்றால் தவறாகும். அதன் காரணமாக இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் நான் கோரிய பரிகாரத்தின்படி அது அனுமதிக்கத்தக்கதில்லை தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Sd/- K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.